**மே - 19**

**"பலமுள்ளவர்களாகிய நாம் நமக்கே பிரியமாய் நடவாமல், பலவீனருடைய பலவீனங்களைத் தாங்க வேண்டும்" - ரோம 15 : 1.**

எந்த காரணத்திலாவது, தத்துவங்கள் ஒரு பொழுதும் கைவிடப்படக்கூடாது. ஆனால் சுயாதீனங்களும், சொந்த உரிமைகளும் அடிக்கடி மற்றவர்கள் சம்பந்தமாகவும், தேவனுக்குப் பிரியமாய் இருக்கவும் அசட்டை செய்யப்படலாம். அப்போஸ்தலனாகிய பவுல், தத்துவத்தின் தற்காப்பிற்காக இயன்றவரையில் எது வேண்டுமானாலும் செய்ய தயாராக இருந்தார் (கலா 2 : 5, 11) ஆனால், கிறிஸ்துவின் நிமித்தமாகவும், சபையின் நிமித்தமாகவும், தனது உலக பிரகாரமான உரிமைகளையும், சலுகைகளையும், சுயாதீனங்களையும் தியாகம் செய்ததில் அவர் கண்கூடாக நமது கர்த்தராகிய யேசுவுக்கு அடுத்தபடியாக வந்தார். மேலும், அவர் எல்லா சபைக்கும் ஒரு மேன்மையான மாதிரியாக இருக்கிறார். **- Z ’97, 75 (R 2118).**

பலவீனமாக இருக்கிறவர்கள், அதிகமாகவோ குறைவாகவோ தங்களுடைய சுமையின் பாரத்தை மற்றவர்கள் மேல் சுமத்துகிறார்கள். அது தங்களுடைய மனுஷீக சுபாவத்திற்கு பிரியமில்லாததாயிருந்தாலும், பலமுள்ளவர்கள் மிகவும் ஏற்ற விதமாக பலவீனமானவர்களின் மிகப்பெரிய பாரத்தின் ஒரு பாகத்தை இலகுவாக்கலாம். கிறிஸ்து, தானே அனுபவிக்காமல், மற்றவர்களுடைய பலவீனங்களை சுமந்து போல, நாமும் நம்முடைய சகோதரருடைய பலவீனங்களைத் தாங்க வேண்டும் என்பதே நமக்காக உள்ள கிறிஸ்துவின் பிரமாணம். **- P '32, 48.**

**ஒத்த வாக்கியங்கள்:-**

ரோம 14; 15:2-7; 1கொரி 8:7-13,9:4-27; கலா 2:20; 6:1; மத் 16:24-26; 1தெச 5:10; 1பேது 4:2; 2கொரி 5:15.

**கோபுர வாசிப்பு : Z ’14, 309 (R 5555)**

**வினாக்கள்:** இந்த வாரத்தில் நான் பலவீனருக்கு உதவி செய்தேனா? எப்படி? ஏன்? பலன் என்ன?